Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

[illegible] 19 } [illegible] 17-8-1946 ஆவணி மீ 1உ } மலர் 45

## ★ சில்லரைக் காசு ★

("காலி மணிபர்ஸ்")

12 வருஷங்களுக்கு முன்பு காணாமற்போன 'காலி மணிபர்ஸ்' இன்றுதான் கிடைத்தது. பழைய 'குடி அரசு' வாசகர்களே இதற்குச் சாட்சி. இனிமேல் வாராவாரம் ([illegible]) உங்களிடம் சில்லரைக் காசுக்காக வருவேன், காலி மணிபர்சுடன்! பழைய சு. ம. தோழர்களும், புதிய திராவிடத் தோழர்களும் கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள்! "யார் இவன்?" என்று யோசிப்பதைவிட்டு, விஷயத்தைமட்டும் கவனித்தால் போதும்! அதுதான் நீங்கள் செய்யக்கூடிய உதவி!

o o

### தீ வைக்கும் ஆராய்ச்சி!

"கரூரில் கைத்தறி செலவுப் பட்டறைகள் நெருப்பு வைக்கப்பட்டதற்குச் சுயமரியாதைக்காரர்களும், கம்யூனிஸ்ட்டுகளும்தான் காரணம்" என்று 'தினமணி'ப் பத்திரிகையின் கரூர் நிருபர் கூறுகிறார்.

மதுரையில் கருஞ்சட்டைப்படைத் தோழர்களை அடித்ததும், பெண்களைத் துன்புறுத்தியதும், மதுரைப் பொதுஜனங்கள்! சேலத்தில் கருஞ்சட்டைக்காரர்கள்மீது கல்லை யெறிந்து [illegible]. சேலம் பொதுமக்கள்! ஆனால் கரூரில் தீ வைக்கக்காரணமாயிருந்தவர் சு. ம.க்களும் கம்யூனிஸ்ட்களுமாம்!

ஓய்! 'தினமணி' நிருபரே! இதைக் கேளும்! மதுரையில் கருஞ்சட்டைப் படை மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத்தார்களே! அதே பொதுஜனங்கள்தான் கரூரில் தீ எப்படி எரிகிறது என்று பரீட்சைப் பார்த்திருக்கிறார்கள்.

தீ வைக்கும் வேலையில் சு. ம.க்கள் பயிற்சி பெறவில்லையே! முதலில் போஸ்டாபீஸ்களுக்கும், போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தீ வைத்தவர்கள்தானே, இப்போது எங்கே தீ வைக்கலாம் என்று இடம் பார்த்துக் கொண்டு திரிகிறார்கள்!

போஸ்டாபீசைவிட, கைத்தறிப்பந்தல் வேகமாக எரிந்ததைப் பார்த்தார்கள்! அதைவிட நூல் பேல் கட்டுகள் நன்றாக எரியும் என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன? அதையும் பரீட்சை பார்த்துவிட்டார்கள். இனி, அடுத்தபடியாக அதைவிட உயர்ந்து எரியக்கூடிய இடத்தில் தீ வைக்கப் போகிறார்கள்! எதற்கும் நீர் உமது பத்திரிகை ஆபீசுக்கு எழுதி முன்ஜாக்கிரதையாய் இருக்கச்சொல்லும்!

விளையாட்டுப் பிள்ளைகள்தானே, பாவம்! சொக்கப்பானை கொளுத்திப் பார்க்கிறார்கள்!

சு. ம. மீதும், கம்யூனிஸ்ட் மீதும் பழியைப் போட்டுவிட்டீரே! "என் சொந்தப் பகையால் எழுதிவிட்டேன்; சு. மக்கள் அல்ல; கரூர்ப் பொதுமக்களே தீ வைத்து விட்டார்கள்" என்று திருத்தம் எழுதிவிடும்!

எல்லாவற்றுக்கும் தீ வைப்பதற்குத் துணிந்தவர்கள்தான்! ஆனால் நூல் கட்டிலும், பந்தலிலும் வைக்கமாட்டார்கள்!

வைதீகத்தின் அடிவயிற்றில் தீ வைப்பார்கள்! ஆரியத்தின் தலையில் தீ வைப்பார்கள்! பழமையின் நெஞ்சில் தீ வைப்பார்கள்! கம்யூனிஸ்ட்களோ, தனியுடைமைத் தத்துவத்தில் தீ வைப்பார்கள்!

ஒன்று சொல்ல மறந்துபோனேனே! 'தீ வைக்கும் தீரர்களுக்காக'வே, தீப்பெட்டியை அரையணாவாக்கியிருக்கிறார்கள், தெரியுமா? முக்காலணா கொடுத்து வாங்கமுடியாது என்பதற்காக அல்ல. காங்கிரஸ் பணத்தைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டாமா? அதற்காகத்தான்!

o o

### வட இந்தியாவுக்கு விபூதி மூட்டை!

"10-8-46 காலை சென்னை ஹிந்து தர்மபரிபாலன போர்டு மந்திரி கனம் கே. கோடிரெட்டிகாரு அவர்கள் திருவாவடுதுறை ஆதீனம் ஹைஸ்கூலில் ஹிந்துஸ்தானி வகுப்பைத் திறந்துவைத்தார்."

அச்சா பாத்! பஹுத் அச்சாஹை!

இந்தச்செய்தி சு. மித்திரன் (சுய ஜாதி மித்திரன் அல்ல! "சுதேசமித்திரன்") 14-8-46ல் 3ம் பக்கத்தில், ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதி சமேதரான போட்டோ படத்துடன் வெளிவந்திருக்கிறது!

"சைவத்தில் சமரசம் அரும்பிக் காய்த்துப் பழுத்துக்கிடப்பதைக் காண்மின்! காண்மின்! சமரசசன்மார்க்க மொன்றே இந்நிலவுலகை உய்விக்கும் அருமருந்து என்பதே என் உள்ளக்கிடக்கை"

என்று திரு. வி. க. அடிக்கடி, பள்ளிப்பள்ளிக் கூறுவதன் உட்கருத்தை இன்றே கண்டேன்! ஆவடுதுறையும் அம்பலவாணா! நமது பெற்றியே பெற்றி!

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# காங்கரஸ் காலித்தனத்திற்கு—இல்லை—இல்லை அஹிம்சா தத்துவத்திற்கு சரியான உதாரணம்



23-6-46ந்தேதி சேலத்தில் தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத்து ஆகியவர்களின் (கருஞ்சட்டைப் படை) ஊர்வலத்தில் காங்கரஸ்காரர்கள் மறைந்திருந்து (இராமன் வாலியை செய்ததுபோல்) 'செய்த பேடிச் செய்கையின் வீரத்தனத்தால் ஒருவருக்கு கால் வெட்டப்பட்டது, மற்றொருவருக்கு ஒரு கண் பொட்டை ஆயிற்று. நிற்பவர் கால் வெட்டுப்பட்ட தோழர் ஜி. வரதராஜு (வயது 20) தலை மாத்திரம் காணப்படுபவர் கண்ணில் அடிபட்டு கண் இழந்த (திருமணம் ஆகி 15-நாட்களே ஆன) தோழர் டி. வரதராஜு (வயது 21). ஆஸ்பத்திரியில் சேர்க்கும்போது இருந்தநிலை.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாடி! திணறிப்போச்சு, போங்கள்!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற முதுமொழிக்கு இலக்காக ஆவடுதுறையில் அவதரித்துள்ளார், ஆதீனம் அவர்கள்!

சைவம் சென்னை பட்டினத்துக்கு வடக்கே செல்லாமல் தேங்கிக் கிடந்ததே, இந்நாள் வரையில்! இனிமேல் அந்தக் கவலை ஒழிந்தது! சைவமெய்யன்பர்கள் ஹிந்தியைப் படித்து வடக்கே சென்று "சோர வ"ரும் செகந்நீரே!" என்று அழைப்பர், இரு கைநீட்டி!

"நமப்பார்வதிபதே! அரஹரா, மகாதேவா!! திருச்சிற்றம்பலம்! தென்னாடுடைய சிவனே போற்றி! வடநாடு செல்லும் வைரவா போற்றி!!"

இதென்ன! மஹாத்மா காந்தியடிகளா? இப்படி விபூதி ருத்திராட்சத்துடன் காட்சியளிக்கிறார்! பண்டிட் நேருகூட பட்டை பட்டையாய் விபூதியடித்துவிட்டாரே! எல்லாம் ஈசன் செயல்! அம்பலவாணன் செயல்!

"ஒப்புயர்வற்ற சைவத்தை இந்தியாவெங்கும் பரப்பக் காரணமான ஹிந்தி வாழ்க! அதற்குத் தடையாயிருந்த தமிழ் ஒழிக!" என்றுகூட இனிச் சைவ மடாதிபதிகள் கூறலாம்! ஹிந்தி எதிர்ப்பில் சிறை சென்ற ஸைவத் சைவத்தோழர் இப்போது எந்த ஆதீனத்தின்கீழ் சைவப் பணியாற்றுகிறாரோ? அவர் மனம் எப்படித் துடிக்கிறதோ?

இனிமேல் வட இந்திய ரயில்வேகள் பாடு கொண்டாட்டந்தான்! "கூட்ஸ் வண்டி"களெல்லாம் வெறும் விபூதி மூட்டைகளாகவே நிரம்பப் போகின்றன!

விவசாய இலாக்காக்காரர்கள் எருவுக்குத் திண்டாடப் போகிறார்கள்! நெல் விளைவு குறையப் போகிறது! உணவுப் பிரச்சினையையே பாதிக்கப்போகிறது! மக்கள் பரிதவிப்பார்கள்! துடியாய்த் துடிப்பார்கள்!

அப்போது வருவார், ரிஷபவாகனரூடராய், என் அப்பன், தோடுடைய செவியன், தூவெண் மதிசூடி! நம் எல்லோரையும் அழைத்துச் செல்வார்! திருச்சிற்றம்பலம்!

## அறிவிப்பு


"விடுதலை" "குடி அரசு" பத்திரிகைகள் கீழ்க்கண்ட இடத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

டி. கே. பீர்முகம்மது,
நியூஸ் ஏஜண்டு,
திருப்பத்தூர், ராமநாதபுரம்.

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)
16-8-46ந் தேதி வரை
மொத்த அங்கத்தினர்கள் 50,923

## சிகிச்சை பெற்றபின்



மேல்கண்ட இருவர்கள் ஆஸ்பத்திரியில் வெட்டுண்டு காயப்பட்டவர் 15-நாளும், கண்போனவர் 29-நாளும் இருந்து டிச்சார்ஜ் செய்து வெளியில் அனுப்பப்பட்டபோது இருந்தநிலை. முதல்வருக்கு கால் சதை 2-அங்குல சதுரம் கத்தரித்து புண் ஆற்றப்பட்டது. இரண்டாவதாருக்கு ஒரு கண் முழுவதும் ஆப்ரேஷன் செய்து எடுத்துவிட்டு புண் ஆற்றப்பட்டது. ஆனால் இனியும் புண் ஆறுவதற்கு மருந்து போடப்பட்டு வருகிறது.

இந்தக் காட்சியை சென்னை கோகலே ஆலில் பெரியார் மக்களுக்கு காட்டும்போது மக்கள் 2500 பேர்கள் ஒரே ஆத்திரமாய் கூப்பாடு போட்டு, காங்கரஸையும், அதன் தலைவர்களையும், பிரதமரையும் தாக்கிப் பேசினார்கள். பெரியார் மக்களைச் சமாதானப்படுத்தி இது ஆரியர் குற்றமே அல்ல, திராவிட விபீஷனர்கள், அனுமார்கள், சூத்திரர்கள் ஆகியவர்களின் இழிதன்மை ஆதலால் அதை சரிப்படுத்த முயலவேண்டுமே ஒழிய ஆரியரை மாத்திரம், பிரதமரை மாத்திரம், சட்டம் நீதி மந்திரியை மாத்திரம் குறைகூறுவதில் பயனில்லை என்றும் இது இன்று நேற்றல்ல—வெகுநாளாய் தமிழரிடையில் இருந்துவரும் சூத்திரத் தன்மை யென்றும் கூறி ஆத்திரத்தை அடக்கினார்.

குறிப்பு:-

இதுவரை இவர்களைப் பற்றி சட்டசபையில் எந்தத் தமிழனும் (திராவிடனும்) ஒரு கேள்வியும் கேட்கவில்லை. ஆனால் முஸ்லிமாகவோ, ஆதிதிராவிடனாகவோ இருந்திருந்தால்?

தமிழர் ராஜா ஆனாலென்ன? சர் ஆனாலென்ன? "சூத்திரன்" தானே.

முஸ்லிம்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களில் சூத்திரர் ("வேசிமக்கள்") இல்லையே

---

### பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 14-8-46 இரவு ஈரோடு வந்தார், 16-8-46ல் ஈரோட்டில் நடைபெற்ற முஸ்லிம்லீக் கூட்டத்தில் கலந்துகொண்டார் 17-8-46 இரவு புறப்பட்டு திருச்சி, கும்பகோணம் முதலிய இடங்களுக்குச் செல்கின்றார்.

### புதுவை இராமலிங்கத்தை வாழ்த்துகிறோம்

புதுவை சகுந்தலா சாயத் தொழிற்சாலை சொந்தக்காரர் தோழர் இராமலிங்கம் அவர்கள் சென்னைக்கு வந்துவிட்டு தனது மோட்டார்காரில் புதுச்சேரி செல்லும்போது கார் கெட்டு மரத்தில் மோதியதால் அவரும், அவர் தந்தை, அத்தை, டிரைவர் முதலியவரும் அடிபட்டு துன்பம் ஏற்பட்டு வருந்த நேர்ந்ததற்காக யாம் வருந்துகிறோம். தோழர் இராமலிங்கத்திற்கு அபாயகரமான அடி ஏற்படாமல் தப்பித்துக்கொண்டதற்கு மகிழ்ந்து அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

குடி அரசு

1946-ஆம் ஆகஸ்டு-௴ 17௳

# காலித்தனம் இனியும் எத்தனை நாள்?

காங்கரஸ்காரர்கள் இன்று இந்நாட்டில் பதவிக்கு வந்திருப்பதானது கட்டுப்பாடான அவர்களது காலித்தனத்தினாலேயே ஒழிய மற்றபடி அவர்களது கொள்கையினாலோ, நாணயத்தினாலோ, பிரதிநிதித்துவ உரிமையினாலோ என்று கடுகளவு அறிவும் அனுபவ ஞானமும் உள்ள எவரும் சொல்ல மாட்டார்கள்.

காங்கரஸ் பச்சையாய் காலித்தனத்தில் இறங்கி சுமார் 20-வருட காலமாகிறது. அதற்கு முன் மக்கள் காங்கரசை ஒரு தெய்வீக தத்துவம் பொருந்திய சாது சங்கம் என்றே கருதி இருந்தார்கள். பின் வரவர காலிகளுக்கும் கூலிகளுக்கும் பொருப்பற்ற தன்னிச்சையாளர்களுக்கும், நிலைக்களனாகி நாட்டில் வேறு வழியில்கூடா ஒழுக்கமாயும், மக்கள் பாதுகாப்பு, சமாதான வாழ்க்கை, ஆகியவைகளுக்கு விரோதமாயும் நடந்துவந்த சோம்பேரிக் கூட்டத்திற்கு வாழ்க்கை வசதியான ஸ்தாபனமாகி கொள்ளை கொலை, பித்தலாட்டம், புரட்டு ஆகியவைகளின் பேராலும் தாசி, வேசி, சூது வாது ஆகியவைகளின் பேராலும், பிழைக்கும் பிரபுக்கள், வியாபாரிகள் மைனர்கள் ஆகியவர்களின் ஆதரணையில் எதிர்ப்பற்ற சுகபோக ஆதிக்கம் பெற்று நாட்டில் நாட்டமாடி வருகின்றவர்களின் ஸ்தாபனமாய் விட்டது. கடைசியாக காலித்தனம், கலவரம், குழப்பம், சூறை, தீயிடுதல் ஆகிய காரியங்களே தேசாபிமானம் தேசசேவை என்கின்றதான 'புனித'ப் பெயருமாகி இன்று அதுவே நாடாள் நாயகமாக ஆகிவிட்டது என்னலாம். சில உண்மையான பெரியோர்களும், யோக்கியமான தொண்டர்களும் அக்குழுவில் இருக்கலாம் என்றாலும் அவர்கள் செல்வாக்கற்றவர்களும், செயலில் சம்மந்தமில்லாதவர்களுமாகவே இருக்கவேண்டியதாகி விட்டார்கள்.

இந்தத் தன்மையுள்ள காங்கரஸ் கட்சியில் இப்போது வரவர காலித்தனத்திற்கு எல்லை இல்லாமல் போய்விட்டது என்பதோடு, காலிகளே ஆட்சிக்கு வரவும், காலிகளே சிம்மாசனத்தில் அமரவும், காலித்தனத்திற்கு தகுதி இல்லாதவர்கள், காலித்தனத்தை எதிர்த்து காலித்தனம் செய்ய சக்தி இல்லாதவர்கள் நாட்டில் வாழமுடியாது என்பதோடு மாத்திரமல்லாமல் அப்படிப்பட்டவர்கள் குழுவில் உள்ள தலைவர் பிரமுகர்கள் என்பவர்கள் அகால மரணமடையவேண்டியவர்களாவார்கள் என்ற நிலைமையை திராவிடநாடு சிறப்பாக தமிழ்நாடு அடைந்துவிட்டது.

காங்கரஸ்காரர்கள் இப்படிப்பட்ட காலித்தனத்தால் பதவிக்கு வந்ததும் இதைவிட சிறந்த "காலித்தனத்தால்தான் நாம் பதவியில் இருக்கமுடியும், பதவியை காப்பாற்ற முடியும்" என்கின்ற தத்துவத்தின்மீதே இப்போது எங்கும் காலித்தனத்தை வளர்த்தும் தூண்டியும் வருகிறார்கள். இதற்கு என் காரணம் இந்நாடு பொருப்பற்ற நாணமற்ற வஞ்சக உள்ளமுடைய ஆரியர் ஆதிக்கத்திற்கு ஆளானதேயாகும். அதனாலேயே இனி வரப்போகும் காலமும் மக்கள் அராஜக நாட்டில் வசிக்கவேண்டிய ஆபத்தான காலமாகக் காணப்படுகிறது. இளைஞர்களைக் காலித்தனத்துக்குத் தூண்டும் உற்சாகப்படுத்தும் பேச்சுக்களும் கருத்துக்களுமே இன்றைய அரசியல் விவகாரமாக கட்சித் திட்டமாக இருந்து வருகின்றன.

அதற்கேற்ற வண்ணமே நாடெங்கும் காங்கரஸ் காரியங்கள் நடந்து வருகின்றன.

உதாரணமாக காங்கரஸ்காரர்கள் தாங்கள் பதவிக்குவந்த காரணமே காலித்தனத்தின் வெற்றி என்று அடிக்கடி (தலைவர்களும்) சொல்லி வருகிறார்கள். காங்கரஸ் தொண்டர்கள் காங்கரஸ் ஆட்சியில் பதவி வேண்டுமானாலும் காலித்தனத்தின் நற்சாட்சிப் பத்திரத்தைக் காட்டியே பதவி பெறுகிறார்கள்.

எல்லா இந்திய காங்கரஸ் தலைவர்கள் இருவரும் "ஆகஸ்ட் (அராஜகம் செய்த) போராட்டத்தால்தான் தேர்தலில் வெற்றிபெற்றோம், வெள்ளையனும் பணிந்தான், அடுத்தாப்போலும் ஆகஸ்ட் (அட்டூழிய) போராட்டம் துவக்கப்போகிறோம்" என்கிறார்கள். பதவி பெற்ற மந்திரிகளும் "நாங்கள் ஆகஸ்டு தியாகிகள், ஜெயிலுக்குச் சென்றவர்கள், ஆதலால் மந்திரிவேலை, காரியதரிசி வேலை சட்டசபை அங்கத்தினர்வேலை கொடுங்கள்" என்று கேட்டு வாங்கினார்கள். சற்றேறக்குறைய பிரிட்டிஷாரும் இந்த மாதிரியான காலித்தனத்தைக் கண்டே அஞ்சுகிறவர்கள்போல் வேஷம் காட்டி "உங்களுக்குச் சுயராஜ்யத்தில் பங்கு வேண்டுமானால் நீங்கள் ஒவ்வொருவரும் காங்கரசைப் பின்பற்றுங்கள்" என்று அறிவுறுத்துவதுபோல் காங்கரசை ஆதரிக்கிறார்கள்.

இதன் பயனாய்த்தான் இந்தியாவில் உள்ள மற்ற அரசியல் மத வகுப்பு கட்சிகள் என்பவை காங்கிரஸ்காலித்தனத்தைச் சமாளிக்கக் காங்கிரசைப்போலவே நடக்கவேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டன. ஏனெனில் காங்கிரஸ் பதவி ஏற்ற இந்த 3, 4 மாத காலத்துக்குள் இந்த தமிழ் நாட்டில் மாத்திரம் நடந்த காங்கிரஸ் காலித்தனங்கள் மிதமிஞ்சினவையாகும்.

சென்னை, திருவண்ணாமலை, மதுரை, பாப்பாரப்பட்டி, சேலம், கரூர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சை, வாணியம்பாடி முதலாகிய பல ஊர்களில் நடந்த காலித்தனங்களால் மக்களுக்கு ஏற்பட்ட தொல்லைகள் துன்பங்கள் நஷ்டங்கள் ஏராளமாகும். பலர் உயிரிழந்தார்கள்; பலர் கண், கால், கை, இழந்தார்கள்; பலர் படுகாயமடைந்தார்கள்; பல கட்டடங்கள், மசூதுகள், தொழிற்சாலைகள், கொட்டாய்கள், எரிக்கப்பட்டு சாம்பலாயினதால் பல லட்சரூபாய்கள் நஷ்டமாயின. மற்றும் பல பொருள்கள் சேதமாயின என்று சொல்லலாம். இவற்றிற்குப் பெரிதும் கேள்வி கேட்பாடு இல்லாமலே போய்விட்டதென்றே சொல்லலாம்.

காலிகள் பெரிதும் காங்கிரஸ்காரர்களும், காங்கிரசினால் ஆதரிக்கப்படுபவர்களும் ஆனதால் போலீசுக்கு சட்டத்திற்குபயப்படாமல் காரியங்கள் நடத்துகின்றனர். போலீஸ் நிர்வாகத்திலும், நீதி நிர்வாகத்திலும், நீதி இலாகா மந்திரித்துவமும் பார்ப்பன ஆதிக்கம் பார்ப்பனர் தலைமை பார்ப்பன மந்திரி ஆனதினால் அதிகாரிகளும் சரியாக நீதி செலுத்துவதில்லை என்னலாம். இந்த லட்சணத்தில் காங்கிரசைப் போலவே முஸ்லிம் லீக்கும், ஷெடியூல்பிடரேஷன் என்னும்; தாழ்த்தப்பட்ட மக்கள் ஸ்தாபனமும் திராவிட சமூகமும் தங்கள் குறைகள் இழிவுகள் தீரவும் காங்கிரசின் இம்மாதிரி காலி ஆட்சியிலிருந்து மீளவும் நேரடி நடவடிக்கைகள் எடுக்கப் போகவேண்டியவைகளாக ஆக்கப்பட்டுவிட்டன என்றால் இனி நாட்டில் சாந்தி, சமாதானம், சட்டம், நீதி எதுவும் நிலைப்போவதில்லை என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

இவ்வளவிற்கும் காரணம் நாடு அற்ற, நிலையற்ற, கொள்கை அற்ற எப்படியாவது தாங்கள் வாழ்ந்தால் போதும் என்கின்ற ஆரியர்களின் அட்டூழியத் தன்மை என்பதைத்தவிர வேறு ஒன்றும் நம்மால் குறிப்பிட முடியவில்லை. ஆனால் இருக்கும் நிலையைப் பார்த்தால் இம்மாதிரி ஆரிய ஆதிக்கம் இன்னும் மேலும் மேலும் வலுப்படும்போலவே காணப்படுகின்றது. இந்த நிலையில் திராவிடநாட்டு திராவிட சமுதாயம் என்பது இழிவைப்பற்றி இன இழிவைப்பற்றிக் கவலை இல்லாமல் ஆரியருக்கு ஆஞ்சநேயராகவே பெரிதும் நடந்துகொள்ளுவதானது இந்த 20வது நூற்றாண்டுக்கு மிகமிக வெட்கக்கேடான காரியமாகும். மானமுள்ள திராவிடர் என்று சொல்லிக்கொள்ளும் மீதிஉள்ள திராவிட மக்களும் தங்கள் மானத்தையும், இன மானத்தையும், தம்முடைய வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொள்ள விற்று வருவதானது அம்மார் திராவிடமகனை விட மனுதர்ம உண்மைச் சூத்திர திராவிட மகனாக போட்டி போடுவதுபோலவே இருக்கிறது. என்னே திராவிடர் நிலை! என்னே திராவிடநாட்டு நிலை! இக்கொடுமை, அட்டூழியம், அராஜகம் இனியும் எத்தனை நாள்!

## காங்கரஸ்காரர்களின் பொய்ப்பிரச்சாரம்

காங்கிரஸ் காலிகள் பிற கட்சியினர்க்குச் செய்யும் தீங்குகளை மறைப்பதற்காகப் பார்ப்பனர்களும், தேசிய ஏடுகளும் பொய்ப்பிரச்சாரம் செய்துவருவதை திராவிடர்கள் நம்பவேண்டாமென்று கேட்டுக்கொள்கின்றோம். கோவில்பட்டியில் கருப்புச்சட்டைக்காரர்கள் காங்கிரஸ்காரனொருவனை தாக்கியதாகவும், நகரில் கலவரம்செய்ய முயலுவதாகவும் காங்கிரஸ் ஏடுகள் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றன.

உள்ளபடியே காங்கிரஸ் முதலாளிகளால் துன்புறுத்தப்பட்ட கரூர் நெசவுத் தொழிலாளர்கள் முதலாளிகளின் அட்டகாசத்தை ஒழிப்பதற்காகக் கரூரில் கிளர்ச்சி செய்தனர். கலவரத்தின் பேரும் கலவரம்செய்ய அண்டிய காலத்திலும் கம்யூனிஸ்ட் முதலிய எல்லா கட்சியினரும் கலந்துகொண்டதாகத் தெரிகிறது என்றாலும், கிளர்ச்சி துவக்கத்திலேயே காங்கிரஸ்காரர்கள் நெசவாளர்களுடன் கலந்து குழப்பம் விளைவிப்பதற்குத் தைரியம் மூட்டிவிட்டனர். காங்கிரஸ்காரர்களேதான் காங்கிரஸ்கொடியைப் பிடித்துக்கொண்டு ஏனைய கட்சியினரையும் தூண்டிவிட்டவர்களுமாவார்கள். இப்படிஇருக்க குழப்பத்திற்குக் காரணத்தை அறிவதற்கு விசாரணை செய்யச் சென்ற முதல் மந்திரியார் பிரகாசம் அவர்களும், காமராச நாடார் அவர்களும் கலவரத்திற்குக் காரணம் கம்யூனிஸ்டுகளும், சுயமரியாதைக்காரர்களும்தான் என்ற முடிவு செய்துள்ளது நமக்குப் பெரிதும் வியப்பையளிக்கின்றது.

மேலும், கரூர் கலவரத்தில் கலந்துகொண்டதாகக் கருதப்படும் சில தோழர்களை வெளி

## மதுவிலக்கு அமுல்

மதுவிலக்கை அமுல் நடத்த போலீஸ் இலாக்காவைப் பயன்படுத்துவதா அல்லது கலால் இலாக்காவைப் பயன்படுத்துவதா என்பதைப் பற்றியும், மேலும் 4-மாவட்டங்களில் மதுவிலக்கை அமுல் நடத்தத் தீர்மானித்திருப்பதால் ஏற்படும் வருமான நஷ்டத்தை ஈடுசெய்ய விற்பனை வரியை அரைச்சதவீதம் உயர்த்தலாமா என்பதுபற்றியும் 13-8-46 சென்னை மந்திரிசபைக்கூட்டத்தில் விவாதித்ததாகத் தெரிகிறது.

எந்த இலாக்காவைப் பயன் படுத்தினாலும் பூரண மதுவிலக்கு ஏற்படுத்தும் வரையில் நாட்டில் பெருங் குழப்பம் உண்டாகும் என்பது உறுதி. நஷ்டத்தை ஈடுசெய்ய விற்பனை வரியை உயர்த்துவதைவிட நாட்டிலுள்ள தொழிற்சாலைகளையும், பல ஸ்தாபனங்களையும் அரசியலார் கைப்பற்றி தாங்களே நடத்தினால் வருமான நஷ்டத்தை எளிதில் ஈடுசெய்யலாம் என்பது மாத்திரமல்லாமல் மாகாணம் முழுவதும் மதுவிலக்கு செய்தாலும் வருமான நஷ்டம் வாராது என்பது பொருளாதார அறிவு படைத்தவர்களின் நம்பிக்கை. இம்முறையில் அரசாங்கம் மேற்கூறிய ஸ்தானங்களைக் கைப்பற்றினால் அந்த ஸ்தாபனங்களின் வாயிலாக முதலாளிகள் கொள்ளையடிக்கும் கோடிக்கணக்கான, இலட்சக் கணக்கான ரூபாய்களை வருமானமாகப் பெறலாம்.

மேலும் வியாபாரவரியால் ஏதோ அரசாங்கத்திற்கு ஓரளவு வருமானம் வந்தாலும் அதனால் கொள்ளை இலாபமடிக்கும் வியாபாரிகள் ஒன்றும் பாதிக்கப்படமாட்டார்கள். பொது மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே மந்திரிசபையார் ஆழ்ந்து சிந்தித்து பொதுமக்களுக்குக் கேடு விளைவிக்காத முறையில் எதையும் முடிவு செய்வார்களாக.

---

...யூர்களுக்குச்சென்று போலீசார் கைது செய்கின்றனர். கைது செய்வது மாத்திரமன்றி அவர்களைக்கடுமையாக அடித்துத் துன்பத்திற்குள்ளாக்குகின்றனர். படுகாயம் பெறும்படி அடிக்கின்றனர். தங்கள் விருப்பம்போல் வாக்குமூலம் வாங்குகின்றனர். இந்தப்படி கைதுசெய்யப்பட்டு துன்பத்திற்குள்ளாகின்றவர்களுள் ஒருவர் கூட காங்கரஸ்காரர் இல்லை என்பதை நினைக்க வியப்பாயிருக்கின்றது. காங்கரஸ்காரர்கள் கலவரத்தில் சேர்ந்திருந்தும் அவர்களைக் கைது செய்யாததையும், கைது செய்தாலும் உடனே விடுதலை செய்துவிடுவதையும் நோக்குப்போது காங்கரஸ்காரர்கள் கலவரத்தை தூண்டிவிட்டு குற்றச்சாட்டை ஏனைய கட்சிகளின்மேல் சுமத்துவதற்காகத் திட்டம்போட்டு வேலை செய்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது.

இம்மாதிரி காங்கரஸ்காரர்கள் செய்ய முனைந்திருப்பது காங்கரஸ் கட்சியினரின் கண்ணியமற்ற தன்மையையும், காலித்தனத்தையும், பேடித்தனத்தையும்தான் காட்டுகின்றதல்லாமல் வேறு என்னவாயிருக்கமுடியும் என்று கேட்கின்றோம்.

ஆகவே அரசியலார் எப்படி நடந்தாலும் இம்மாதிரி பொய்ப் பிரச்சாரத்தைப் பொது மக்கள் நம்பவேண்டாமென்று மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்.

## மறைவு

தோழர் ப. மரியவர்களின் தந்தையார் பு. வெ. பழனி அவர்கள் இயற்கை எய்தி 8-8-46ம் நாளோடு ஓராண்டு ஆகின்றது. அதன் நினைவாகக் குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

நமது இயக்கத்தோழரும் மருத்துவகுல நண்பருமான தோழர் கருத்தமுத்து அவர்கள் 28-7-46ல் ஈரோட்டில் இயற்கையெய்தியது குறித்து ஈரோடு திராவிடர் கழகத்தார் தங்கள் அனுதாபத்தை அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## திராவிடர்கழகநிதி

### முக்கிய அறிவிப்பு

திராவிடர் கழக நிதி சேர்ப்பதற்காக அச்சிடப்பட்ட நிதி டிக்கட்டுகள் ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டு நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

நிதிக்குத் தொகை தரும் தோழர்கள், அதற்குரிய டிக்கட்டுகளை நிதி வசூலிப்போரிடமிருந்து பெற்றுக் கொள்வது அவசியம்.

நிதிகொடுக்கும் தோழர்களின் பெயரை அந்தந்த டிக்கட்டுகளில் எழுதிக்கொடுக்கும்படி நிதி வசூலிக்கும் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். டிக்கெட் புத்தகத்தின் அடிக்கட்டையிலும் (Counter foil) நிதி தரும் தோழரின் பெயரைக் குறிப்பிடுவது நல்லது.

என். அர்ச்சுனன்,
தலைவர், தி. க. நிதிக்கமிட்டி,
தலைமை நிலையம், சென்னை.

## 2-இலட்சம் பேல் பஞ்சு ஏற்றுமதி

2-இலட்சம் பேல் பஞ்சு வெளிநாட்டிற்கு ஏற்றுமதிசெய்ய அனுமதிக்கப்படுமென்று இந்திய சர்க்காரின் கமிஷனர் அறிவித்துள்ளார். நாட்டிலே நெசவுத் தொழிலாளர்களுக்குப் போதிய நூல் கிடைக்கவில்லை. துணிப்பஞ்சம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது. இந்த நிலைமையில் வெளிநாட்டிற்கு 2-இலட்சம் பேல் பஞ்சு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது நியாயமா? ஏன் அந்த பஞ்சை இந்தியாவிலேயே நூலாக்கி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்தக் கூடாது? மக்களின் நன்மைக்காகவே ஆட்சிமன்றத்தில் அமர்ந்திருப்பதாகச் சொல்லப்படும் காங்கரஸ்காரர்களுக்கு இச்செய்தி தெரியாதா? தெரிந்திருந்தால் ஏன் இரண்டு இலட்சம் பேல் பஞ்சையும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யாமல் தடைசெய்யக் கூடாது? ஆகவே இதுகுறித்து ஆட்சியிலிருக்கும் காங்கரஸ் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களாவென்று பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# தென்னிந்திய ரயில்வேயில் வேலை நிறுத்தமேன்?

## பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளையனின் அட்டகாசமும்

(ஓர் தொழிலாளி)

சென்ற சில மாதங்களாகத் தினசரி பத்திரிகைகளில் வேலை நிறுத்தங்களைப்பற்றிய செய்திகள் வந்தவண்ணமேயிருக்கின்றன. மற்ற எல்லா தொழில்களின் வேலை நிறுத்தங்களைவிட தேசத்தின் ஜீவநாடியாக விளங்கும் ரெயில்வே வேலை நிறுத்தமும், தபால் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும்தான். தபால் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஒருவாறு தீர்ந்துவிட்டது. ஆனால் ரயில்வே வேலை நிறுத்தத்திற்கு இன்னும் முற்றுப்புள்ளி வைக்கவேயில்லை.

இந்த உபகண்டம் பூராவும் உள்ள ரயில்வேக்கள் அத்தனையும் சென்ற ஜூன்மாதம் 27ந்தேதி வேலை நிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் எல்லா ரயில்வேயும் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டபிறகு தென்னிந்திய ரயில்வே மாத்திரம் ஏன் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

தென்னிந்திய ரெயில்வேயின் முக்கிய இடமாகிய பொன்மலைத்தொழிற்சாலையில் தொழிலாளர்கள் சென்ற மாதம் 23ம் தேதி முதல் ஓர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். ஏன்? இந்த தொழிற்சாலையில் மானேஜராக இருந்தவர் ராஜாங்கமய்யர் என்னும் பார்ப்பனர். அவருக்கு காங்கரசினிடத்தில்ரொம்ப பக்தியாம். தொழிலாளர்களின் நலத்திற்காக என்று கூறிக்கொண்டு தொழிற்சாலையின் உள்ளேயே ஓர் ஆபீஸ் வைத்திருக்கிறார்கள். அதற்குத் தலைமைஅதிகாரி கே.பி. மேனன் என்னும் மலையாளி. இந்த இருவருமாகச் சேர்ந்து தண்டனை முறைச் சட்டம் என்னும் புதிய முறையை வைத்துக்கொண்டு, தங்களுக்கு வேண்டாதவர்களை—அதாவது தொழிற்சங்கத்தில் முன்னணியில் இருந்து வேலை செய்பவர்களை—ஏதாவது ஓர் சாக்கை வைத்துக்கொண்டு டிஸ்மிஸ் செய்வதும், 2-4-0 ரூபாய் சம்பளம் வாங்கும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் 0-11-4 ஆக ஆக்குவதுமாகச் செய்து வந்தனர்' இப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களிலோ அல்லது சம்பளம் குறைக்கப்பட்டவர்களிலோ ஒரு பார்ப்பனன்கூட கிடையாது. சுமார் 10 பேர்கள் வரை இந்த கதிக்கு ஆளாகியிருப்பார்கள். இந்த சட்டம் மற்ற ரயில்வேக்களிலும் உண்டல்லவா என்று வாசகர்கள் கேட்கலாம். ஆனால் அங்கெல்லாம் பார்ப்பன ஆட்சி உச்சஸ்தானத்தில் இல்லாமலிருக்கலாம் இந்த சட்டத்தை உடைத்தெறியத்தான் உள்ளிருப்புவேலை நிறுத்தம் செய்தனர். பஞ்சப்படிக்கும், சம்பளத்திற்கும் போராடும் இந்த சமயத்தில் வேலைக்கே ஆபத்தேற்படுத்தும் சூழ்ச்சியை முக்கியமாக பிராமணால்லாதாரையே நீக்கும் பார்ப்பன அதிகாரிகளின் போக்கைக் கண்டிக்காமலிருக்கமுடியுமா? வேலை நிறுத்த காலத்தில் பிராமணர்கள் எல்லோரும் வேலைக்குச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியார் அடிக்கடி "இமயமலையில் உள்ள ஓர் பார்ப்பனனுக்குத் தேள் கொட்டினால், கன்னியாகுமரியிலுள்ள பார்ப்பனனுக்கு நெறிகட்டும்" என்று கூறுவார். அதுபோல ராஜாங்கமய்யர் செய்யும் கொடுமைகளைக் கண்டிக்க ஆரம்பித்தவுடன் எல்லா பார்ப்பனரும் ஒன்று சேர்ந்து கொண்டு, நமது திராவிட தோழர்களில் சிலரையும் சேர்த்துக்கொண்டு இந்த வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டுகளாலும், பிராமண துவேஷிகளாலும் செய்யப்படுவது, அதில் ஒருவரும் சேராதீர்கள் என்று பிரச்சாரம் செய்தனர். அத்தோடு நில்லாமல் காங்கரசின் பெயரால் ஓர் சங்கமும் நிறுவிவிட்டனர். அதற்குத் தலைவர் ஓர் திராவிடர். ஆனால் அதன் சூத்திரதாரி ஓர் பிராமணர். ஆகஸ்டு 1ந்தேதி மறியலில் தலைமைதாங்கும் திராவிடத் தோழருக்கு மண்டை உடைந்துவிட்டதாகக் கேள்வி. ஆனால் பிராமணர்கள் இருந்த இடமே தெரியவில்லை.

ஆகவே வேலையை இழக்காமலும், சம்பளத்தை குறைக்காமலும் இருக்க இப்பொழுது இருக்கும் தண்டனை முறை சட்டத்தை எடுக்கவும், பார்ப்பனர்கள் தேசியத்தின்பேரால் செய்யும் துரோகச் செயல்களை அகற்றவும், மற்றும் முன்பு கொடுத்த வேலை நிறுத்தத்தில் உள்ள குறைகளையும், வேலை இழந்தவர்களுக்கு வேலை கொடுக்கவுமாகிய தீர்மானங்களைப் போட்டு. ஓர் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். தோழியர் குஞ்சிதம் அம்மையார் சொன்னதுபோல் திருச்சி ஜங்ஷன் ஓர் ஸ்ரீரங்கமாகவாய் அங்கு பிராமண ஆதிக்கம் தாண்டவமாடுகின்றது. அதைவிட்டு பிரதம மந்திரி கம்யூனிஸ்டுகள்தான் வேலை நிறுத்தத்திற்கு காரணம் என்று கூறுவது மிகவும் தப்பான காரியம், 1928ல் நடந்த வேலைநிறுத்தம் யாரால் நடத்தப்பட்டது என்பதை யோசிக்கவேண்டும். தென்னிந்திய ரெயில்வேயில்வேலைநிறுத்தத்துக்குக் காரணம் வெள்ளையன் போட்ட சட்டத்தைப்பார்ப்பனன் தப்புத்தவறுமாக பிரயோகித்ததின் விளைவுதான். இதைமாற்ற வேண்டும்.

சம்பள விஷயத்தில் பெரியார் கூறுவதுபோல், உழைப்பவருக்கும் முதலில் (Capital) பங்கும், லாபத்தில் பங்கும் இருந்தாலொழிய எந்த வேலை நிறுத்தமும் தவிர்க்கமுடியாமல்தான் போகும்.

தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் நடந்தால் நமது திராவிட நாட்டுக்குத்தான் பெரிய கஷ்டம். அதை தடுக்கவேண்டியது ஒவ்வொரு திராவிடரின் கடமையாகும். அதற்காக ஒவ்வோர் ஊரிலும் கிளர்ச்சி செய்தால்கூட நல்லது. இனி காங்கிரசை நம்பியிருத்தல்கூடாது. அவர்கள் வெள்ளையரின் வார்சு ஆகிவிட்டனர். வெள்ளையன் என்ன செய்வானோ, அதையேதான் பிரதமர் செய்திருக்கிறார். வெள்ளைக்கார I. G. களையும், D. S. P களை

யம்விட்டு தொழிலாளர்களை அடக்கச் செய்கிறார்.

தேசியப்பத்திரிகைகளில் விளம்பரங்கள் வருகின்றன. செயினாஸ்டன் கையொப்பமிட்டு குறைந்தபட்ச சம்பளம் ரூ. 2-0-0 தருவதாகக் கூறப்படுகிறது. அந்த மாதிரியே இப்பொழுது இருக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் நல்லது.

எனவே ஆரியனும் ஆங்கிலேயனும் சேர்ந்து ஒப்பந்தம் செய்துகொண்டு இந்த நாட்டை குட்டிச்சுவராக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடமை ஆகும்.

## மதிப்புரை

"முஸ்லிம் லீக்"—இஃதோர் வார வெளியீடு. தோழர் எ. எம். சகு. அவர்கள் இதன் ஆசிரியராவர். தென்னாட்டில் முஸ்லிம் மக்களின் முன்னேற்றத்திற்கெனவே சிறந்த செய்தித்தாளொன்றில்லை என்று சொல்லப்பட்டுவந்த குறையை "முஸ்லிம் லீக்" ஓரளவில் போக்குமென்பது நமது நம்பிக்கை. சிறந்த அறிஞர்களால் எழுதப்படும் சிறந்த அரசியல் கட்டுரைகள் "முஸ்லிம் லீக்"கில் மிளிர்கின்றன. இதன் தனிப்பிரதி விலை ரூ 0-1-6. கிடைக்குமிடம்: ஸ்ரீ புனித அச்சகம், காரைக்கால்.

o o

"திராவிடப் பண்"—தோழர் புதுவைச் சிவம் அவர்கள் "திராவிடப் பண்"ணின் ஆசிரியராவர். 'திராவிட நாடு', 'திராவிடர் கொடி', 'திராவிடர் கழகத்தில் சேர்வீர்' என்பவைபோன்ற பல தலைப்புகளிட்டு உணர்ச்சியூட்டும் வகையில் பாக்கள் பாடப்பட்டுள்ளன; இக்கால் இசையை ஒட்டி பாடப்பட்டுள்ளதால் இக்கால இசைப்புலவர்களுக்குத் திராவிடப் பண் ஓர் சிறந்த விருந்தென்னலாம். இதன் விலை ரூ. 0-3-6 கிடைக்குமிடம்: ஞாயிறு நூற்பதிப்பகம், 28, அம்பலத்தாடையர் மடத்துத் தெரு, புதுச்சேரி (F. I.)

o o

"காதலும் கற்பும்"— இந்நூலை யாத்தியவரும் தோழர் புதுவைச்சிவம் அவர்களேதான். பண்டைத் தமிழரின் உண்மைக்காதல், கற்பு ஆகியவற்றின் நிலைமையையும், அவை சிறந்ததற்குரிய காரணத்தையும், அவற்றை நம்மவர் கைக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும் "காதலும் கற்பும்" என்ற நூலில் அழகிய பாக்களால் விளக்குகின்றார்; இசைஞர்கள் தவறாது படித்தற்குரிய நூல். விலை மூன்றணா. கிடைக்குமிடம் 'ஞாயிறு நூற்பதிப்பகம், 28, அம்பலத்தாடையர் மடத்துத்தெரு புதுச்சேரி (F. I.)

o o

## ஈரோட்டில் லீக் கூட்டம்

ஈரோடு ஜின்னா மைதானத்தில் 16ந் தேதி மாலை 6-மணிக்கு முஸ்லிம்கள் பொதுக்கூட்டம் கூடிற்று. 5000பேர் கொண்ட ஊர்வலம் நடந்தது. தோழர்கள் பெரியார், முதலாளி ஷேக்தாவூத் சாயபு முதலியவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

பொதுக்கூட்டத்திற்கு 10000 பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள். வேலூர் பிரிவிவியால் மௌலானா மௌலவி ஹமானி ஹஜரத் தலைமை வகித்தார். தோழர்கள் சேலம் தாஜுதீன், ஈ. வி. கே. சம்பத், மௌலானா மௌலவி சைனார்மூசமது, பெரியார் ஈ. வெ. ராமசாமி, ஆகியவர்கள் பேசினார்கள். ஈரோடு முதலாளி கா. அ. ஷேக்தாவூத்சாயபு, பெரிய அக்கிரகாரம் இ. கு. ஹாஜி முகமது மீரா சாயபு ஆகியவர்கள் கான்சாகிப் பட்டத்தை விட்டுவிட்டதாக வெளிப்படுத்தினார்கள். முதலாளி சாயபுக்கு ஏகமனமாக மாலை சூட்டப்பட்டது. கூட்டம் 10க்கு முடிவடைந்தது.

"இன எழுச்சி"—தோழர் திராவிடக்கழல் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'இனஎழுச்சி' ஓர் சிறந்த மாத வெளியீடு. சீர்திருத்தக்கொள்கைகளைப் பரப்பும் சீரிய கட்டுரைகளும், கதைகளும் 'இனஎழுச்சி'யில் வெளியாகின்றன. கிடைக்குமிடம் K. Y. திராவிடர் கழகம், 75/38 வின்சண்ட் தெரு, கொழும்பு.

o o

"திராவிட நாட்டுப்பண்"— இதன் ஆசிரியர் நாடக ஆசிரியர் தோழர் டி. பி. வேலாயுதசாமி அவர்களாவர். இதில் திராவிடர் கழகக் கொள்கைகள் பாக்கள் வாயிலாக மிளிர்கின்றன. இசையரங்குகளில் இசைப்புலவர்கள் பாடுதற்குரிய பாக்களைக் கொண்டது "திராவிடநாட்டுப்பண்." இதன் விலை மூன்றணா. கிடைக்குமிடம் டி. பி. வேலாயுதசாமி, தமிழ் நாடக நூலாசிரியர், குகை, சேலம்.

பால்யன்

(வெள்ளி வெளியீடு)

ஆசிரியர்:- உ. அ. ஹனிபா

பகுத்தறிவு வளர பாடம்! பண்பு பெற்றுய்ய பாதை!
பாரின் போக்கிற்கேற்ப நாமும் முன்னேறவேண்டும் என்ற முரசொலி!
பாழ்பட்ட சமூகங்கள் வாழ்வுற்று விளங்கிட பாசறை!
இத்தனையும் ஒருங்கே நிறைந்து 16-8-46 முதல் 2-அணா விலையில் 12-பக்கங்களுடன் வெளிவருகிறது.

சந்தா
உள்நாடு வருடம் 1-க்கு ரூ. 7-0-0, 6-மாதத்திற்கு ரூ. 4-0-0.
வெளிநாடு வருடம் 1-க்கு ரூ 9-0-0 6-மாதத்திற்கு ரூ. 5-0-0.

விளம்பர விகிதத்திற்கும் விற்பனையாளர் நிபந்தனைக்கும் எழுதி தெரிந்துகொள்க.

நிர்வாகி,
'பால்யன்' பணிமனை, காரைக்கால்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.